# ජාතික අධ්‍යාපන කොමිෂන් සභාව

## වාර්ෂික වාර්තාව

## 2013

# தேசிய கல்வி ஆணைக்குழு

## வருடாந்த அறிக்கை

## 2013

# National Education Commission

## Annual Report

## 2013

## வருடாந்த அறிக்கை 2013

**பணிகள்**

தேசிய கல்விக் கொள்கை தொடர்பாக மேதகு ஜனாதிபதியவர்களுக்கு விதப்புரை சமர்ப்பிப்பதை நோக்கமாகக் கொண்டு 1991 இன் 19 ஆம் இலக்கச் சட்டத்திற்கிணங்க தாபிக்கப்பட்ட தேசிய கல்வி ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்படுகின்ற பிரதான பணிகள் பின்வருமாறு-

(அ) தேசிய கல்விக் கொள்கையையும் நடைமுறையிலுள்ள திட்டங்களையும் காலத்துக்குக் காலம் மீளாய்வு செய்தலும் பகுப்பாய்வு செய்தலும் அவசியமானவிடத்து திட்டங்கள் தொடர்பில் செய்ய வேண்டிய மாற்றங்கள் பற்றி மேதகு சனாதிபதிக்கு விதப்புரை செய்தல் உட்பட, கல்வி கொள்கையை தொடர்ச்சியாக பேணுவதை உறுதிப்படுத்துதல் மற்றும் சமூகத்தில் ஏற்படும் தேவைக்கு அமைவாக கல்விக் கொள்கை இணங்கும் வகையில், கல்விக் கொள்கையின் அனைத்துப் பிரிவுகள் தொடர்பாகவும் ஜனாதிபதிக்கு விதப்புரை செய்தல்;

(ஆ) தற்போது செயற்படுத்தப்படும் தேசிய கல்விக் கொள்கை மற்றும் திட்டத்தை அல்லது திட்டத்திதை காலத்திற்கு காலம் மீளாய்வு செய்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தலுடன் அவசியமாயின் கொள்கையில், திட்டங்களில் அல்லது திட்டமிடல்களில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் தொடர்பாக ஜனாதிபதிக்கு விதப்புரை செய்தல்;

(இ) ஆணைக்குழுவின் ஆலோசனை மற்றும் ஜனாதிபதி அவர்களினால் ஆணைக்குழுவிற்கு அனுப்பக்கூடிய, கல்விக்கு உரிய அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் ஜனாதிபதிக்கு ஆலோசகை வழங்கல்.

**ஆணைக்குழு**

முதலாவது ஆணைக்குழு 1991 - 1996 காலப்பகுதிக்காக நியமிக்கப்பட்டது. இரண்டாவது ஆணைக்குழு 1996 ஒக்டோபர் 01 ஆம் திகதியில் இருந்து 2001 செப்ரெம்பர் இறுதிவரை இயங்கியது. மூன்றாவது ஆணைக்குழு 2001 ஒக்டோபர் 01 ஆம் திகதியில் இருந்து 2004 மே மாதம் 30 ஆம் திகதி வரை இயங்கியது. நான்காவது ஆணைக்குழு 2004 யூலை 01 ஆம் திகதியில் இருந்து 2006 மார்ச் வரை இயங்கியது. அதன் ஐந்தாவது ஆணைக்குழு 2006 ஏப்பிரல் 10 ஆம் திகதியில் இருந்து தனது பணிகளை ஆரம்பித்ததோடு, 2011 ஏப்ரல் 09 ஆந் திகதி அதன் பதவிக் காலம் நிறைவடைந்தது. ஆறாவது ஆணைக்குழு தனது முதலாவது கூட்டத்தினை 2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் திகதி நடாத்தி தனது உத்தியோகபூர்வமான பணிகளை ஆரம்பித்தது. ஆணைக்குழு இன்றளவில் முழு வீச்சுடன் 1991ஆம் ஆண்டின் 19ஆம் இலக்கச் சட்டத்தின்படி ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பொறுப்பினையும், வகிபாகத்தினையும் நிறைவேற்றி வருகிறது.

**ஆணைக்குழுவின் நிறுவனக் கட்டமைப்பு கீழ்வரும் வகையில் அமையும் :**

(அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தவிசாளர்

(ஆ) 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை, வாழ்க்கைத் தொழிற்கல்விச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட மூன்றாம் நிலை, வாழ்க்கைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் தவிசாளர்

(இ) கல்வி, உயர்கல்வி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் விதப்புரையின் பேரில் சனாதிபதியினால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினரொருவர்

(ஈ) நிதி விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் விதப்புரையின் பேரில் சனாதிபதியினால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினரொருவர்

(உ) மாகாண சபைகள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் விதப்புரையின் பேரில் சனாதிபதியினால் நியமிக்கப்படுகின்ற உறுப்பினரொருவர்

(ஊ) கல்வி, நிர்வாகம் அல்லது முகாமைத்துவம் ஆகிய துறைகளில் ஆற்றல்களை வெளிக்காட்டியுள்ள அல்லது ஏதேனும் தொழிலில் சிறப்புத் தேர்ச்சியைப் பெற்றுள்ள ஆட்கள் மத்தியில் இருந்து சனாதிபதியால் நியமிக்கப்பட வேண்டிய வேறு உறுப்பினர்கள் பத்து பேர். 5வது பிரிவின் கீழ் நியமிக்கப்படுகின்ற தவிசாளர், உப தவிசாளர் (கொள்கை) மற்றும் உப தவிசாளர் (திட்டமிடல்) ஆணைக்குழுவில் முழு நேர அங்கத்துவம் வகிப்பர்.

இருந்த போதிலும் 2004 ஆம் ஆண்டிலிருந்து ஒரு உப தவிசாளரால் மேற்படி இரண்டு உப தவிசாளர் பதவிகள் (கொள்கை மற்றும் திட்டமிடல்) தொடர்பான பணிகள் புரியப்பட்டுவருகின்றன.

தற்போது இவ்வாணைக்குழு நுகேகொட, நாவல வீதி, இல. 126 எனும், முகவரியில் அமைந்துள்ளது. சனாதிபதியவர்களால் நியமிக்கப்படுகின்ற ஆணைக்குழுவின் செயலாளர் நிர்வாகப் பணிகளுக்குப் பொறுப்பாக செயற்படுவார். தற்போது ஆணைக்குழு 25 நிரந்தரப் பணியாளர் குழாமினைக் கொண்டுள்ளது. அதன் தாபனக் கட்டமைப்பு பின்னிணைப்பு V இல் காட்டப்பட்டுள்ளது.

## செயலாற்றுகைச் சுருக்கம் - 2013

### (1) அறிமுகம்

தேசிய கல்வி ஆணைக்குழுவிற்கு நாளாந்தம் சாட்டப்பட்டுள்ள பிரதான பணிகளை கீழ்வருமாறு பிரதான மூன்று வகைகளாகப்ப பிரிக்க முடியும்.

1. திட்டங்களை மீளாய்வு மற்றும் பகுப்பாய்வு செய்வதன் மூலம் தேசிய கல்விக் கொள்கைக்கு தகவல்களை வழங்குதல்.
2. காலத்தின் தேவைக்கு அமைவாக நடைமுறையில் உள்ள கல்விக் கொள்கையை புதுப்பித்தல்.
3. மேற்குறித்த மீளாய்வு, பகுப்பாய்வு, விளக்கும், புதுப்பித்தல் அனைத்தையும் திரட்டி நாட்டுக்கு பொருத்தமான கொள்கையை அரச தலைவர்களுக்கு வழங்குதல்.

தேசிய கல்வி ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு கீழ்க் காட்டப்பட்டுள்ளவாறு விடயம் சார்ந்த 03 நிலையியற் குழுக்கள் தாபிக்கப்படடன. அவையாவன,

1. பொதுக் கல்வி பற்றிய நிலையியற் குழு
2. பல்கலைக்கழகக் கல்வி பற்றிய நிலையியற் குழு
3. மூன்றாம் நிலை மற்றும் தொழில்நுட்பவியல் கல்வி பற்றிய நிலையியற்குழு

ஒவ்வொரு துறையிலும் விசேட அறிவினைக் கொண்ட நிபுணர்கள், அந்த துறையில் தொழில்புரிபவர்கள மற்றும் உரிய துறையில் பல்லேறு திறன்களை வெளிப்படுத்தியுள்ள தனியார் துறை கல்விமான்களை பிரதான தரப்பினராகக் கொண்ட 15 -20 நபர்களை உள்ளடக்கி இந்த மூன்று நிலையியற் குழுக்களும் அமைந்துள்ளது. 2013ம் ஆண்டு இந்த நிலையியற் குழுவின் தலைவர் பதவியை கீழ்வரும் கல்வியாளர்கள் வகிக்கின்றனர்.

1. பொதுக் கல்வி பற்றிய நிலையியற் குழு – திரு ஆரியரத்ன ஹேவகே
2. பல்கலைக்கழகக் கல்வி பற்றிய நிலையியற் குழு – பேராசிரியர் செல்வி ஷானிகா ஹிம்புரேகம
3. மூன்றாம் நிலை மற்றும் தொழில்நுட்பவியல் கல்வி பற்றிய நிலையியற்குழு – பேராசிரியர் திரு தயன்த விஜேசேகர

ஒரு கூட்டத்திற்கு ஆயிரம் ரூபாவை மட்டும் பெற்றுக்கொண்டு இந்த குழுவின் அங்கத்தவர்களினால் தேசிய கல்வி ஆணைக்குழுவின் பணிகளை நிறைவேற்றுவதற்கு பாரிய பணிகள் 2013ம் ஆண்டு ஆற்றப்பட்டது. தேசிய கல்வி ஆணைக்குழுவின் அங்கத்தவர்களும் மேற்குறிப்பிட்ட நிலையியற் குழு அங:கத்தவர்களின் விசேட அறிவு மற்றும் தேசிய கல்வி ஆணைக்குழுவின் நீண்டகால அனுபவம் என்பவற்றை பயன்படுத்தி தேசிய கல்வி ஆணைக்குழுவினால் 2013ம் ஆண்டினுள் நிறைவேற்றப்பட்ட செயலாற்றுகைகள் கீழே வருமாறு சுருக்கமாக விபரிக்கப்பட்டுள்ளது.

### (2) நிலையியற் குழுவின் பணிகள்

### 2.1 பொதுக் கல்வி பற்றிய நிலையியற் குழு

பொதுக் கல்வி பற்றிய கொள்கைச் சட்டகம் 2003ம: ஆண்டு வெளியிடப்பட்டதுடன் அந்த கொள்கைச் சட்டகத்தை கருத்தில் கொண்டு இலங்கையின் பொதுக் கல்விக்குரிய புதிய கொள்கைச் சட்டகத்தை தயாரித்தல் அவசியமாகின்றது. 2013ம் ஆண்டு தேசிய கல்வி ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக முதன் படிமுறையாக கொள்கைச் சக்கரத்திற்கு பிரதான கட்டம் பின்பற்றப்பட்டது. இந்த பணிகளுக்கு முதல் நடவடிக்கையாக பொதுக் கல்வி பற்றிய நிலையியற் குழு நிறுவப்பட்டது. திரு ஆரியரத்ன ஹேவகே இந்தக் குழுவின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், பொதுக் கல்வியின் பிரதான அங்கத்தவர்களைப்

பிரதிநிதித்துவப்படுத்தி நிதி ஆணைக்குழு, தொழில் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், கல்வி அமைச்சு, கொழும்பு பல்கலைக்கழகம், ஊவா மாகாண கல்விக் காரியாலயம், புத்தாக்க ஆணைக்குழு, கல்வித் திணைக்கம், சியனா கல்விக் கல்லூரி, கலேவல மற்றும் கம்பஹா வலயக் கல்விக் காரியாலயம், வியாங்கொடை ஆசிரியர் கலாச்சாலை, கொழும்பு தேவி பாலிகா வித்தியாலயம், உலக வங்கி கல்விக் கருத்திட்டம் என்பவற்றில் இருந்து 18 நபர்கள் பங்குபற்றிய இந்தக்குழு 2013ம் ஆண்டில் இருந்து செயற்பட ஆரம்பித்தது.

பொதுக் கல்வி பற்றிய புதிய கொள்கை சட்டகத்தை தயாரிப்பதற்கு நிலையியற் குழுவினால் பின்பற்ற வேண்டிய பாதைத் திட்டத்தை தயாரித்தல் இந்த நிலையியற் குழுவின் முதல் பணியாக அமைந்தது. அதனை அடிப்படையாகக் கொண்டு கொள்கைச் சட்டக வெளியீட்டின் அத்தியாய தலைப்புகள் வரிசை வரைவு தயாரிக்கப்பட்டது. கலந்துரையாடல் சிலவற்றுக்குப் பின்னர் அத்தியாய தலைப்புகளின் வரிசைக்குரிய இறுதி வரைவு மூலமாக கவனத்தில் கொள்ள வேண்டிய விடயத்துறைகள் எவை என்பது எனத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

மூன்று மொழிகளிலும் பத்திரிகையில் அறிவித்தல் வெளியிடப்பட்டு பல்வேறுபட்ட தரப்பினரிடமிருந்தும் பொதுக் கல்வி நிர்மாணிப்புக்கான புதிய கொள்கை சட்டகத்திற்கான கருத்து மற்றும் முன்மொழிவுகளை பெற்றக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அரசின் செய்தித் திணைக்களத்தினதும் தகவல் மற்றும் ஊடக அமைச்சினதும் அனுசரணை பெற்றுக்கொண்டு செய்திக் கலந்துரையாடல்கள் பல நடாத்தப்பட்டு இது தொடாபாக எடுத்துக்கொண்ட கவனத்தை காரணமாகக் கொண்டு பல்வேறு தரப்பினர் மற்றும் அலும் குழுவினரால் இந்த் பணிக்கான பெறுபேற்றைப் பெற்றுக்கொள்ள முடியந்தது. விசேட கவனத்தைச் செலுத்த வேண்டிய அலும் குழுவை அழைத்து திறந்த கலந்துரையாடல்களை நடாத்தியதின் மூலம் பொது கல்வி பற்றிய கொள்கைச் சட்டகத்தை தயாரிக்கையில் கவனத்தை செலுத்த வேண்டியப பல்வேறு துறைகள் மற்றும் விடயங்ள் தொடர்பாக தெளிவுபடுத்திக்கொள்வதற்கு முடிந்தது.

இதன் போது வெளிப்பட்ட விடயத்தின் படி 10 விடயத்துறைகளின் கீழ் கற்கைகள் மேற்கொள்ளப்பட்டு கொள்கைச் சட்டகம் தயாரிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனத் தீர்மானம் எடுக்கப்பட்டது. ஒவ்வொரு விடயத்துறைக்கும் கற்கையை மேற்கொண்டு அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு 3 – 4 வரையான விடய நிபுணர்களை உள்ளடக்கி ஒவ்வொரு துறைக்கும் நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தீர்மானிக்கப்பட்ட 10 விடயத்துறைகள் கீழ்வருமாறு அமைகின்றது.

1. பாடவிதான அபிவிருத்தி
2. ஆசிரியர்களின் மற்றும் ஆசிரி தொழில் அபிவிருத்தி
3. மதிப்பீடு செய்தல் மற்றும் மதிப்பிடுதல்
4. தரத்தினை உறுதிப்படுத்தல் மற்றும் புதுப்பித்தல்
5. கல்வியை திட்டமிடுதல் மற்றும் முகாமைத்துவம் செய்தல்
6. கல்வி கற்கும் சூழலை அபிவிருத்தி செய்தல்
7. கல்வி முதலீடு
8. தொழில் வழிகாட்டல்கள்
9. கற்பிக்கும் மொழி, தேசிய மற்றும் சர்வதேச மொழி
10. விசேட கல்வி மற்றும் முறைசாராக் கல்வி

பத்திரிகை அறிவித்தல் வெளியடப்பட்டதுடன் தேசிய கல்வி ஆணைக்குழுவின் வெப் தளத்தின் ஊாடாக இது தொடாபாக மக்களின் கருத்து மற்றும் யோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கான செய்தி வெளியிடப்பட்டது.
பத்து கல்விக் குழுக்களுக்கான பணி விடயம் குறித்துரைக்கப்பட்ட ஆவணம் வழங்கப்பட்டு 2013ம் ஆண்டின் இறுதியில் அவர்களின் சொந்த முன்மொழிவுகள் கல்விக்குரிய துறைப் பயணத்தில் ஈடுபடுத்தப்பட்டது.

## 2.2 பல்கலைக்கழகக் கல்வி பற்றிய நிலையியற் குழு

இந்த நிலையியற் குழுவும் பல்வேறுபட்ட தொழில், கல்வித் தரப்பினா் மற்றும் அலும் குழுவின் பங்களிப்புடன் பல்கலைக்கழக கல்விக்கான கொள்கைச் சட்டகத்தை தயாரிக்கும் இறுதி இலக்கு வரை பயணிக்கும் எதிர்பார்ப்புடன் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டது. பல்கலைக்கழகக் கல்விக்குரிய தேசிய கொள்கையை தயாரிக்கையில் கீழ்வரும் விடயங்கள் தொடாபாக விசேட கவனம் கொள்ளப்படல் வேண்டும் என இதன் போது வெளிப்படுத்தப்பட்டது.

1 பல்கலைக்கழக கல்விக்கு தேசிய கொள்கையின் தேவை
2 மகிந்த சிந்தனை எதிர்கால நோக்கில் குறிப்பிட்டவாடு தாய்மொழியில் கல்வியைக் கற்றல்.
3 பல்கலைக்கழக கல்விக்கான தேசிய தரத்தினை உறுதிப்படுத்துவதற்கும் மற்றம் அமுல்படுத்துவதற்கும் குழுவொன்றை நிறுவுதல்.
4 பல்கலைக்கழக கொள்கையை மீள்மீளாய்வுக்குட்படுத்துதல்.
5 பல்கலைக்கழக கல்வி தொடர்பாக மாணவர்கள், ஆசிரிய அதிபர் சமூகத்திற்கு வழிகாட்டுதலை வழங்குதல்.
6 அரச பல்களைக்கழகங்களுடன் இணைத்து பிரதேச மட்டத்தில் பல்கலைக்கழக கல்லூரிகளை நிறுவுதல்.
7 உயர் கல்விக்காக பல்வகைப்பட்ட கற்கை முறைமைகளை உருவாக்கல்
8 இணை பட்டத்திற்கான நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துதல்.
9 அரச பல்கலைக்கழகங்களுக்கு துறை ரீதியான அணுகலை நிறுவுதல்.
10 பட்டப்பின் படிப்பு கல்விக்காக தேசிய தரத்திலான சட்டகமொன்றை அறிமுகப்படுத்தல்.
11 பல்கலைக்கழகத்தில் ஒழுக்கத்தைப் பேணுவதற்காக பொது வழிகாட்டலைத் தயாரித்தல்.
12 பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் குழப்பநிலை தொடாபாக கவனத்தைச் செலுத்துதல்.
13 வைத்திய துறைக்கான பட்டப்பின்படிப்புக் கல்வி.
14 இலங்கை அரச சார்பற்ற மற்றும் அரச பல்கலைக்கழகங்களுக்கு பின்பற்ற வேண்டிய ஒழுக்கம் தொடாபாக மக்களின் கருத்துக்களைக் கேட்டறிதல்.

இந்தக் குழுக் கூட்டங்களக்கு சமாந்தரமாக தேசிய கல்வி ஆணைக்குழு அங்கத்தவர்கள் மற்றும் சில நிலையியற் குழுவின் அங்கத்தவர்கள் சிலருடன், தேசிய ஆணைக்குழுத் தலைவர், உப தலைர் மற்றும் செயலாளர் உட்பட கல்விப் பணிக்குழுவின் அங்கத்தவர்கள் சிலருடன் மேற்கொள்ளப்பட்ட கள விஜயங்களின் ஊடாக அடி மட்டத் தரப்பினருடனும் அலும் குழுவினருடனும் நேரடி தகவல்களை வழங்கும் முறைமை பயன்படுத்தப்பட்டு கலந்துரையாடல்கள் சில ஒழுங்கு செய்யப்பட்டது. கீழ்வரும் நிறுவனங்களின் கல்விசார் பதவியினர், கல்விசாரப் பதவியினர், நிர்வாக பணிக்குழு மற்றும் மாணவர்களை உள்ளக்கி உபகுழுக் குழுவொன்றுடன் கட்டமைக்கப்பட்ட கலந்துரையாடல் முறை இங்கு பயன்படுத்தப்பட்டது. கீழ்வரும் பல்கலைக்கழகங்களுக்கு சென்று பௌதீக விதப்புரைரய வழங்கும் வண்ணம் இந்த கலந்துரையால் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

1. ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
2. மொரட்டுவைப் பல்கலைக்கழகம்
3. வைத்திய விஞ்ஞான பட்டப்பின் கற்றை நிறுவனம்

கீழ்வரும் விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என இந்த கலந்துரையாடல்களில் வெளிப்படுத்தப்பட்டது.

1. கல்விசார் பதவியினர், கல்விசாரப் பதவியினர், உதவி ஊழியர்களின் பற்றாக்குறை
2. கல்விசார பதவியினருக்கும் நிர்வாக ஊழியர்களுக்கும் இயலளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள் இல்லாமை
3. மூன்றாம் நிலை மற்றும் உயர் தொழில் பதவியினருக்கான பற்றாக்குறை

**2.3 மூன்றாம் நிலை மற்றும் தொழில்நுட்பவியல் கல்வி பற்றிய நிலையியற்குழு**

இந்த குழுவிற்கு உரிய துறையைச் சேர்ந்த நிபுணர்களை உள்ளடக்கி குழு அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டனர். இந்த நிலையியற் குழுவில் உள்ள அங்கத்தவர்கள் மூன்றாம் நிலை மற்றும் உயர் தொழில் கல்விக்கான தேசிய கொள்கையை உருவாக்குவதற்கான கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர். இந்த பாதை வரைபடத்தை தயாரிக்கையில் கீழ்வரும் விடயங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது.

- மூன்றாம் நிலைக் கல்விக் கோட்பாடு
- மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வியின் பல்வகைமைப்படுத்தல்
- மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி மற்றும் பயிற்சி எனும் துறைகளில் காணபடும் மேற்குவிப்பு மற்றும் இடைவெளி
- தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை
- தேசிய தரத்தையுடைய நிறுவனங்கள் ஊடாக செயற்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களின் தரம்
- பொது, உயர், தொழில் மற்றும் மூன்றாம் நிலை கல்வித்துறைகளிடையே நிலவும் பரஸ்பர இணைத் தொடர்புகள்
- தொழில் நிறுவனங்கள், சர்வதேச தமைகளை வழங்குகின்ற நிறுவனங்கள், சர்வதேச தரச் சான்றிதழ்களை வழங்குகின்ற நிறுவனங்கள், அரச மற்றும் தனியார் துறையின் பயிற்சி நடவடிக்கைகள், ஆட்சேர்ப்பு நிறுவனங்கள்.

**(3) தேசிய கல்வி ஆணைக்குழுவிற்கு சாட்டப்பட்டுள்ள விசேட பணிகள்.**

**3.1 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு கற்கை அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

அமைச்சின் செயலாளர் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் கீழ்வரும் விடயங்கள் தொடர்பாக விதப்புரைகளைக் கோரும் பொழுது, தேசிய கல்வி ஆணைக்குழுவின் ஊடாக அவசியமான உப குழுக்களை நிறுவி பொருத்தமான கற்கைகளை மேற்கொண்டு உரிய அறிக்கையினை வழங்குதல்.

**3.1.1. க.பொ.த (சாதாரண) பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பாக தேசிய மட்டத்தில் நடாத்தப்படும் செயலமர்வுகள் தொடாபாக விதப்புரையுடன் கூடிய முன்மொழிவுகள் அடங்கிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அவசியமான கற்கைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்தல்.**

ஜனாதிபதி செயலாளரினால் மேற்குறித்த முன்மொழிவுகள் கற்கை செய்யப்பட்டு அறிக்கையிடுமாறு தேசிய கல்வி ஆணைக்குவிற்கு அனுப்பப்பட்டது. அதன்படி பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக, திரு ஆர் ஏ ஏ கே ரணவக்க மற்றும் பேராசிரியர் ஜயசேன கொட்டேகொட என மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட குழுவினால் இந்த முன்மொழிவுகள் கற்கை செய்து சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அமைச்சரவைக்கு விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்டது.

**3.1.2 கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் மீள்கட்டமைப்பு ஆணைக்குழுவின் விதப்புரையை செயற்படுத்தல் - பல்லினப் பாடசாலைகளை நிறுவுவதற்கு ஊக்குவித்தல் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட விதப்புரை உள்ளடங்களாக முன்மொழிவு அடங்கிய அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு உரிய விடயங்களை கற்கைசெய்து அறிக்கையிடுதல்.**

ஜனாதிபதி செயலாளரினால் மேற்குறித்த முன்மொழிவுகள் கற்கை செய்யப்பட்டு அறிக்கையிடுமாறு தேசிய கல்வி ஆணைக்குவிற்கு அனுப்பப்பட்டது

தேசிய கல்வி ஆணைக்குழுவினால் மேற்குறித்த முன்மொழிவுகள் கற்கைசெய்யப்பட்டு விதப்புரை சமர்ப்பிக்கப்பட்டது.

**3.1.3 சர்வதேச பாடசாலை மற்றும் தனியார் பாடசாலைகளின் செயற்பாடுகளுக்கு உரிய கீழ்வரும் அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு உரிய விடயங்களை கற்கை செய்து அறிக்கை சமர்ப்பித்தல்.**

அ) சர்வதேச பாடசாலை மற்றும் தனியார் பாடசாலைகளில் கற்கும் கட்டாய கல்வி வயதுகளில் இருக்கும் மாணவர்களுக்கு தாய் மொழி, சமயம் மற்றும் வரலாறு போன்ற பாடங்களை கற்பித்தலை கட்டாயமாக்கல்.

ஆ) அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நன்கொடைகளைப் பெற்றக்கொள்ளாத தனியார் பாடசாலைகளுக்கு அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளுக்கு வழங்கும் வசதிகளை வழங்குதல்.

இ) சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகளை ஒழுங்குபடுத்தல்.

ஜனாதிபதி அவர்களினால் மேற்குறித்த அமைச்சரவை விஞ்ஞாபனங்களும் அவற்றுக்குரிய முன்மொழிவுகளும் கற்கை செய்யப்பட்டு அறிக்கையிடுமாறு தேசிய கல்வி ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டது. அதன்படி மேலே (அ) வில் குறிப்பிடப்பட்ட முன்மொழிவை கற்கை செய்து அறிக்கையிடுவதற்கு பேராசிரியர் எஸ் சந்திரசேகரம், கலாநிதி ஷிரந்தி விஜேமான்ன மற்றும் புஸ்பா களுபோவில எனும் தேசிய கற்கை ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் அடங்கிய உப குழு நிறுவப்பட்டது.

இத்துடன் அதன் உப குழு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தேசிய கல்வி ஆணைக்குழுவினால் இந்த அமைச்சரவை விஞ்ஞாபனம் மூன்றுக்கும் உரிய இறுதி விதப்புரை ஜனாதிபதி செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

## 3.2 ஜனாதிபதி செயலகத்திக்கு வழங்கப்பட்ட அறிக்கைகள்

மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு மேலதிகமாக ஜனாதிபதி செயலாளகத்தினாலும், அமைச்சரவை செயலக காரியாலயத்தினாலும் தேசிய கல்வி ஆணைக்குழுவினால் விசேடமாக கற்கைசெய்யப்பட்டு அறிக்கை செய்யப்பட வேண்டிய அரசின் கொள்கைக்குரிய பணிகளையும் இடைக்கிடை மேற்கொள்ளும்.

அத்தோடு அரச அலுவலர்களினால் பின்பற்ற வேண்டிய அரச மொழிக்கொள்கை பற்றிய விடயங்களை கற்கை செய்து விதப்புரை சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட அலுவலர்களின் அறிக்கையை கற்கை செய்தலும் அடங்குகின்றது. இதன்படி தாய் மொழிக்கு மேலதிகமாக வேறொரு அரச மொழியையும் இரண்டாம் மொழிப் பாடமாக கட்டாயம் 2017ம் ஆண்டு க.பொ.த (சாதாரண)ப் பரீட்சையில் உட்படுத்துவதற்கான முன்மொழிவு தொடர்பாக சகல தரப்பினரையும் கேட்டறிந்து விதப்புரையுடன் முன்மொழிவுகளையும் உட்படுத்தி சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதிச் செயலாளரினால் தேசிய கல்வி ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. தேசிய கல்வி ஆணைக்குழு இது தொடாபாக ஆய்வு மற்றும் பகுப்பாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது.

## (4) தேசிய கல்வி ஆணைக்குழுவினால் செயற்படுத்தப்படும் விசேட கற்கைகள்

### 4.1 மூன்றாம் வகை பாடசாலைகளின் தகவல்கள் அடங்கிய தரவு முறைமையொன்றைத் தயாரித்தல்.

கல்வி அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்படும் பாடசாலை வகைப்படுத்தலுக்கு அமைவாக சிறிய பாடசாலைகளில் பல 2 மற்றும் 3ம் வகை பாடசாலை தொகுதிகளில் ஆகும். 2012ம் ஆகும் பொழுது 2 மற்றும் 3ம் வகை பாடசாலைகளின் எண்ணிக்கை 7139ஆகும். இந்தப் பாடசாலைகளில் பாரியளவு கிராமிய, தோட்ட மற்றும் சிறிய நகரப் பிரதேசங்களில் அடங்கியுள்ளது. இத்துடன் 3ம் வகையின் கீழ் கருதப்படும் பாடசாலைகளின் அளவு மற்றும் தரச் செயலாற்றுகை தொடர்பான தரவு முறைமையை தயாரிப்பதன் ஊடாக கொள்கை சட்டகத்திற்கு வசதியளிப்பதற்கு இலகுவாகும் என வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதனால், இலங்கையினுள் தற்பொழுது செயற்படுத்தப்படும் 3ம் வகை பாடசாலைகளுக்குரிய தரவுகளை சேகரிப்பதற்கான நடவடிக்கைகள் 2013ம் ஆரம்பிக்கப்பட்டது.

இதற்கான கேள்விக்கொத்தை தயாரிக்கும் பொழுது 130 ஆசிரிய ஆலோசகர்களின் உதவி பெறப்பட்டு தகவல் சேகரிப்பு திட்டமிடப்பட்டது. சில பாடசாலைகளைத் தேர்ந்தெடுத்து மேற்கொள்ளப்பட்ட முன்னோடி மாதிரிகளின் பின்னர் வடமேல் மாகாணத்தில் அமைந்துள்ள 374 பாடசாலைகளல் தகவல்கள் சேகரிக்கப்பட்டது. 2013ம் ஆண்டு இறுதியில் பூர்த்திசெய்யும் வகையில் தகவல் தரவு முறைமைக்கு அமைவாக தககல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

## செயலாற்றுகையை உயர்த்துவதற்கான முன்மொழிவுகள்

**1. பொருத்தமான நிறுவனத் திட்டங்கள்**

**1.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி**

தேசிய கல்வி ஆணைக்குழுவினால் தற்போது பயன்படுத்தப்படும் 1991ம் ஆண்டு இந்த ஆணைக்குழுவை நிறுவுவதற்கு காரணமான 1991ம் ஆண்டு 19ம் இலக்க சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு வரையறுக்கப்பட்டுள்ள தொலைநோக்கு மற்றும் செயற்பணிகளாகும். எனினும், சர்வதேச கல்வித்துறையில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் போக்கு என்பவற்றை அடையாளம் கண்டு பிரதான அரச கொள்கைப் பிரகடனமான மகிந்த சிந்தனை எதிர்கால நோக்கில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவு கேந்திரப்படுத்தப்பட்ட சமூகத்தை உருவாக்குவதற்கு உரிய வகையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் தொலைநோக்கு மற்றும் செயற்பணியை இற்றைப்படுத்துதல்.

**1.2 நிறுவனங்களின் மதிப்பு மற்றும் இலக்கு**

மாறுபடும் புதிய தொலைநோக்கு மற்றும் செயற்பணிகளை அடைவதற்கு தேசிய கல்வி ஆணைக்குழுவின் நிறுவனங்களின் பெறுமதி அடையாளம் காணப்படுவதுடன், இலக்குகள் மேம்படுத்தப்பட வேண்டியுள்ளது. இதற்காக தேசிய கல்வி ஆணைக்குழு அங்கத்தவர்களின் பங்களிப்புடன் சான்றாண்மை செயலமர்வொன்றை நடாத்துவதற்கு திட்டமிடப்படுகின்றது.

**2. வள ஏற்பாடுகள்**

**2.1 நிதி வளம்**

தேசிய கல்வி ஆணைக்குழுவிற்கு ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு 2014ம் ஆண்டுக்கு குறித்துரைக்கப்பட்ட கருத்திட்ட யோசனைகளை சேகரித்தல் அவசியமாகின்றது. இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

**2.2 மனித வளம்**

தேசிய கல்வி ஆணைக்குழுவின் ஊழியர்கள் எண்ணிக்கை 28 நபர்களாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கொள்கை சட்டகத்தை உருவாக்குவதற்கு ஆராய்ச்சி மற்றும் ஆய்வு கட்டாயம் மற்றும் அவசியம் என்பதனால் இப்பணிகளுக்கு நிபுணத்துவம் பெற்ற ஊழியர்கள் முக்கயமாகும். இதற்காக புதிய பதவிகளை உருவாக்குவதற்கும், தற்போதுள்ள வெற்றிடங்களை முழுமையாக பூரணப்படுத்துவதற்கும் அவசிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன், அனைத்து ஊழியர்களுக்கும் பொருத்தமான தொழில் விபரிப்புகள் தயாரிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

## நிர்வாகம் மீதான அறிக்கை

### 1. ஆணைக்குழு

(அ) 2013ம் ஆண்டுக்கான தேசிய கல்வி ஆணைக்குழுவின் தலைவராக பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக செயற்பட்டார்கள்.

(ஆ) தேசிய கல்வி ஆணைக்குழுவிற்கு 2013ம் ஆண்டு உப தலைவராக கலாநிதி ஜயந்தி குணசேகர நியமிக்கப்பட்டார்.

(இ) தேசிய கல்வி ஆணைக்குழுவின் செயலாளராக 01.04.2013ம் திகதி வரை திரு சந்திரரத்ன பல்லேகம பணியாற்றியதுடன் 01.04.2013ம் திகதியில் இருந்து இன்று வரை திருமதி பி ஜி டி பிரதீப் சேரசிங்க அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்டார்.

### 2. வெளிவாரி மானியங்கள் கிடைக்கும் கருத்திட்டங்கள்

வெளிவாரி மானியங்கள் கிடைக்கப்பெற்று செயற்படுத்தப்படும் கருத்திட்டங்கள் ஏதும் 2013ம் ஆண்டு செயற்படுத்தப்படவில்லை. எனினும், பொதுக் கல்விக்கான கருத்திட்டத்தை தயாரிப்பதற்கு உரிய கொள்கை சட்டகத்தை செயற்படுத்துகையில், நலன்விரும்பிகள் மற்றும் விருப்பக்குழுக்களை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பத்து கற்கைகளுக்கு, அறிவுக் கேந்திரத்தை உருவாக்குவதற்கு பாடசாலை கல்வி முறைமையை உருவாக்கல் எனும் உலக வங்கி கருத்திட்டத்தின் கீழ் இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவனத்தினால் நிதி அனுசரணை வழங்கப்பட்டது. இதற்காக ரூபா 5 மில்லியன் செலவிடப்பட்டது.

இணைப்பு (I)

## நடைமுறையல்லாத சொத்துக்களின் அசைவு பற்றிய அறிக்கை- 2013

செலவினத் தலைப்பு இல. : 12

அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் : தேசிய கல்வி ஆணைக்குழு

| செலவு விடயம் மற்றும் சொத்துக்களின் தொகுதி | | சொத்துக்களின் குறியீடு மற்றும் பெயர் | | வருடத்தினுள் சேர்த்தல் ** | |
|---|---|---|---|---|---|
| | | | | | Rs. |
| | | BAI | மோட்டார் சைக்கிள் | 1 | 152,040.00 |
| | | SC | இரும்பு அலுமாரி | 6 | 80,700.00 |
| | | C3 | கையுள்ள குஷன் கதிரை | 13 | 61,600.00 |
| | | BA | புத்தக அலுமாரி | 1 | 20,000.00 |
| | | COM-LTC | மடிக் கணினிகள் | 3 | 386,500.00 |
| | | PSC | ஸ்கேனர் | 1 | 13,250.00 |
| | | T25 | டு வடிவ மேசை | 2 | 99,800.00 |
| | | T26 | எழுதுநர் மேசை 50"x30" | 3 | 37,350.00 |
| | | C15 | கிளறிக்கள் கதிரை | 3 | 13,500.00 |
| | | FC | கோவை கபினெட் (இரும்பு) | 1 | 14,900.00 |
| | | EK | மின் கேத்தில் | 1 | 3,900.00 |
| | | CHB | திருப்பு விளக்கப்படம் குழு | 3 | 33,566.40 |
| | | DT | தரவு மாற்றீடு | 3 | 6,670.00 |
| | | COM-KB | கணினி விசைப்பலகை | 1 | 1,250.00 |
| | | PC | பிரதிகள் மெஷின் | 1 | 291200 |
| | | | | | **1,216,226.40** |

**தேசிய கல்வி ஆணைக்குழு**
**மொத்த மெய்ச் செலவு – 2013**

| | உருப்படிவிபரம் | நிகர வழங்குதல் | மொத்தமெய்ச் செலவு |
|---|---|---|---|
| | **மீண்டுவரும் செலவு** | **27,003,800.00** | **25,244,406.97** |
| | **ஆட்களின் வேதனாதிகள்** | | |
| 1001 | சம்பளமும் ஊதியமும் | 9,440,000.00 | 8,442,011.49 |
| 1002 | மேலதிகநேரப் படியும் விடுமுறைதினகொடுப்பனவுகளும் | 660,000.00 | 658,971.30 |
| 1003 | பிறகொடுப்பனவுகள் | 4,900,000.00 | 4,336,401.71 |
| | **பிரயாணச் செலவுகள்** | **100,000.00** | **99,889.00** |
| 1101 | உள்நாட்டு | 100,000.00 | 99,889.00 |
| 1102 | வெளிநாட்டு | | |
| | **வழங்கல்கள்** | **2,116,191.00** | **2,072,225.03** |
| 1201 | காகிதாதிகளும் அலுவலகத் தேவைகளும் | 250,000.00 | 246,931.01 |
| 1202 | எரிபொருளும் உராய்வுநீக்கியும் | 1,700,000.00 | 1,661,513.04 |
| 1203 | சீருடைகள் | 91,191.00 | 89,541.00 |
| 1205 | பிற | 75,000.00 | 74,239.98 |
| | **பராமரிப்புச் செலவுகள்** | **1,475,000.00** | **1,371,434.55** |
| 1301 | வாகனங்கள் | 900,000.00 | 892,363.32 |
| 1302 | இயந்திரசாதனங்கள் | 500,000.00 | 455,561.23 |
| 1303 | கட்டிடங்கள் | 75,000.00 | 23,510.00 |
| | **சேவைகள்** | **8,312,609.00** | **8,263,473.89** |
| 1402 | அஞ்சல்,தொலைத் தொடர்பு | 600,000.00 | 588,955.05 |
| 1403 | நீர்,மின்சாரம் | 900,000.00 | 874,279.44 |
| 1404 | வாடகையும் குத்தகையும் | 5,268,800.00 | 5,265,321.60 |
| 1405 | பிற | 1,543,809.00 | 1,534,917.80 |
| | **மூலதனச் செலவு** | **4,050,000.00** | **2,618,596.44** |
| | **மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் தரமுயர்த்தலும்** | | |
| 2002 | இயந்திரசாதனங்கள் | 50,000.00 | _ |
| | | | |
| | **மூலதனசொத்துக்களைகொள்ளுதல்** | | |
| 2101 | வண்டி | 200,000.00 | 152,040.00 |
| 2102 | தளபாடங்களும் அலுவலகசாதனங்களும் | 900,000.00 | 772,986.40 |
| 2103 | இயந்திரங்கள் | 400,000.00 | 291,200.00 |
| | | | |
| 2401 | பயிற்சிமற்றும் அபிவிருத்தி | **500,000.00** | **498,000.00** |
| 2502 | முதலீட்டு | **2,000,000.00** | **904,370.04** |
| | **முழு மொத்தம்** | **31,053,800.00** | **27,863,003.41** |

டீ.ஜீ.எஸ்.ஏ.-1

## ஒதுக்கீட்டுக் கணக்கு 2013

[illegible] அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் : தேசிய கல்வி ஆணைக்குழு

| வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிகழ்ச்சித் திட்ட இல. | வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | (1) வரவு செலவு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (2) குறைநிரப்பு ஏற்பாடு மற்றும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு | (3) நி. ஒ. 66 மற்றும் 69 இன் பிரகாரம் மாற்றல்கள் | (4) மொத்தத் தேறிய ஒதுக்கீடு (1+2+3) | (5) மொத்தச் செலவினம் | (6) தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (4-5) | பக்க இல. (தொடர்புடைய மாதிரி டீ.ஜீ.எஸ்.ஏ-2 இன் பிரகாரம்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | |
| 1 | மீண்டுவரும் | **26,075,000** | 928,800 | 2,116,191<br>-2,116,191 | 27,003,800 | 25,244,407 | 1,759,393 | 3 |
| | உப மொத்தம் (மீண்டுவரும்) | **26,075,000** | **928,800** | -- | **27,003,800** | **25,244,407** | **1,759,393** | |
| 1 | மூலதனம் | **3,350,000** | 700,000 | -- | 4,050,000 | 2,618,596 | 1,431,404 | 4 |
| | உப மொத்தம் (மூலதனம்) | **3,350,000** | **700,000** | -- | **4,050,000** | **2,618,596** | **1,431,404** | |
| | முழு மொத்தம் | **29,425,000** | **1,628,800** | -- | **31,053,800** | **27,863,003** | **3,190,797** | |

பக்க இலக்கம் 2 முதல் 15 வரை டீ.ஜீ.எஸ்.ஏ 2 முதல் டீ.ஜீ.எஸ்.ஏ 10 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புக்கள் இலக்கம் 16 முதல் 20 உள்ளடக்கிய ஏனைய விபரங்களும் இந்த ஒதுக்கீட்டுக் கணக்கிலேயே அடங்கிய பகுதியாகும். அதனால் மேலேயுள்ள கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளி விபரங்கள், அது தொடர்பான கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புக்களுக்கு இணங்கியதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதையும், திறைசேரிக் கணக்குப் புத்தகங்களுடன் தொடர்புடைய கணக்குகள் ஒப்புநோக்கப்பட்டுள்ளது என்பதையும், அவை சரியென உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன்.

பிரதான கணக்குக் கொடுக்கும் அலுவலர்
பெயர்:
பதவி :
திகதி : 31-03-2014

**Prof. Lakshman Jayatilleke**
Chairman
National Education Commission
126, Nawala, Road, Nugegoda

கணக்குக் கொடுக்கும் அலுவலர்
பெயர்:
பதவி : 31. 03. 14
திகதி :

**P. G. D. Pradeepa Serasinghe**
Secretary
National Education Commission
126, Nawala Road, Nugegoda.

பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர் :
திகதி : 14.03.31

**S. M. Ariyarathna De Alwis**
*Deputy Secretary*
National Education Commission
126, Nawala Road, Nugegoda.

இணைப்பு III

**இணைப்பு IV**

## தேசிய கல்வி ஆணைக்குழு
## 2013ம் ஆண்டு

ஆறாவது ஆணைக்குழுவின் முதலாவது ஆணைக்குழு கூட்டம் 20 நவம்பர் 2012ம் திகதி நடாத்தப்பட்டதுடன், அதனுடைய உத்தியோகபூர்வ பணிகளை ஆரம்பித்தது.

**அதன் அங்கத்துவம்:**

தலைவர் : பேராசிரியர் லக்ஷ்மன் ஜயதிலக

உப தலைவர் : கலாநிதி (திருமதி) ஜயந்தி குணசேகர

**உத்தியோகபூர்வ அங்கத்தவர்கள்:**

| | |
|---|---|
| **தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு** | **பேராசிரியர் காமினி சமரநாயக்க 15.01.2013ம் திகதியில் பேராசிரியர் திருமதி க்ஷானிகா ஹிரிம்புரேகம 19.02.2013ம் திகதியில் இருந்து** |
| **தலைவர், மூன்றாம் நிலை, வாழ்க்கைத் தொழிற்கல்வி ஆணைக்குழு** | பேராசிரியர் திரு. தயந்த விஜேசேகர |
| **கல்வி அமைச்சின் பிரதிநிதி (செயலாளர்)** | திரு. கோத்தபாய ஜயரத்ன 30.07.2013ம் திகதியில் திரு. அனுர திசாநாயக்க 17.09.2013ம் திகதியில் இருந்து |
| **நிதி, திட்டமிடல் அமைச்சின் பிரிதிநிதி (பணிப்பாளர், தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம்)** | திருமதி. அயந்தி டி சில்வா |
| **உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சின் பிரதிநிதி (செயலாளர்)** | திரு. ஆர். ஏ. ஏ. கே. ரணவக |

**நியமன உறுப்பினர்கள் ::**

சங்கைக்குரிய பேராசிரியர் பெல்லன்வில விமலரத்தன தேரர்
கலாநிதி திரு. சுனில் ஜயந்த நவரத்ன
திரு. ஆரியரத்ன ஹேவகே
திருமதி. புஷ்பா களுபோவில
பேராசிரியர் திரு. ஜயந்த கோட்டேகொட
பேராசிரியர் திரு. எஸ். சந்திரசேகரம்
கலாநிதி திருமதி. ஹிரன்தி விஜேமான்ன
திருமதி. அநோஜா வீரசேகர

**செயலாளர்**

திரு. சந்திரரத்ன பல்லேகம – 01.04.2013ம் திகதி வரை

திருமதி. பீ.ஜி.டி.பிரதீபா சேரசிங்க – 01.04.2013ம் திகதியில் இருந்து

**தலைப்பு 1 இருந்து 22 விை விசேட செயவுகள் அலகு பற்றி 29.10.2014ம் திகதி தேசிய கல்வி ஆணைக்குழுவிற்கு கிடைத்த 2013ம் ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் இருந்து பிரித்தொடுக்கப்பட்ட குறிப்புகள்**

---

**I ம் பிரிவு**

**விசேட செலவுகள் அலகுத் தலைப்பு மற்றும் உரிய கணக்குகள் பற்றிய சுருக்க அறிக்கை**

---

**1. திணைக்களம், அலுவலகம் மற்றும் ஆணைக் குழுவின் விசேட செலவுச் சுருக்க அறிக்கை**

---

| தலைப்பு | திணைக்களம், அலுவலகம், ஆணைக் குழு குழுவின் பெயர் |
|---|---|
| 12 | தேசிய கல்வி ஆணைக்குழு |

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த ஒதுக்கீடு மற்றும் செலவு**

தேசிய கல்வி ஆணைக்குழுவின் 20 செலவு விடயங்களுக்காக செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஒதுக்கீடு ரூ. 31,053,800 ஆக அமைந்ததோடு, மீளாய்வாண்டின் இறுதியாகும் போது இதில் ரூ. 27,863,003 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி, ஆணைக்குழுவின் ஒதுக்கீட்டில் மிகுதியாக ரூ. 3,190,797 அல்லது 10 வீதம் இருந்ததுடன் இது 12 தொடக்கம் 100 வரையான வீச்சுக்குள் இருந்தது. விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**31 டிசம்பர் 2013ம் திகதியில்**

| செலவு | நிகர ஒதுக்கீடு | பயன்படுத்தல் | மீதி | நிகர ஏற்பாடுகளின் வீதம். |
|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | |
| மீண்டுவரும் | 27,003,800 | 25,244,407 | 1,759,393 | 6.5 |
| மூலதனம் | 4,050,000 | 2,618,596 | 1,431,404 | 35.3 |
| மொத்தம் | 31,053,800 | 27,863,003 | 3,190,797 | |

**2.2 அரச அலுவலர்களுக்கான முற்பணக் கொடுப்பனவுக் கணக்கு**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டடிருந்த வரையறைகள்**

தேசிய கல்வி ஆணைக்குழு அரசாங்க ஊழியர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றம் விதித்திருந்த கீழே குறிப்பிடப்பட்ட வரையறைகள் கடைப்பிடிக்கப்பட்டிருந்ததோடு அது பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவு | பெறுகை | வரவு மீதி | குறைந்த | எல்லை | உச்ச எல்லை | உண்மை |
|---|---|---|---|---|---|---|
| ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| **01201** | **1,500,000** | **759,659** | **600,000** | **858,611** | **6,000,000** | **2,648,335** |

**2.3 பணி முற்பணமும் பொதுவைப்புக் கணக்குகளும்**

**2.3.1 பணி முற்பணக் கணக்கு**

தேசிய ஆணைக்குழுவின் 7002/0000/00/0256/0013/000ம் கணக்கு இலக்கத்தில் 31 டிசம்பர் 2013ம் திகதியில் மீதி ரூ. 994,887 ஆகும்

**2.3.2 பொது வைப்புக் கணக்கு**

-----------------------------

தேசிய ஆணைக்குழுவின் 6000/0/15/14ம் கணக்கு இலக்கத்தில் 31 டிசம்பர் 2013ம் திகதியில் மீதி ரூ. 30,000 ஆகும்

## பகுதி II

**ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்புடனும் தொடர்புடைய விபரமான அறிக்கை**

**1 ஒதுக்கீட்டுத் தலைப்பு 12 - தேசிய கல்வி ஆணைக்**

**1.1 கணக்காய்வுப் பரப்பெல்லை**

தேசிய கல்வி ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 ஆந் தேதியில் முடிவுற்ற ஆண்டுக்கான நிதி அறிக்கைகள், கணக்கிணக்க கூற்றுகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் பிற அறிக்கைகளை உள்ளடங்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசிலமைப்பின் 154 (1) உறுப்புரையின் ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வு ஆண்டுக்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஒகஸ்ட் மாதம் 11ம் திகதி ஆணைக்குழுவின் தவிசாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் பற்றிய கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பவை கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் பற்றிய மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்களிலான மாதிரிகள் பற்றிய உறுதிப்படுத்தல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அத்தகைய மீளாய்வுகள் மற்றும் பரிசோதனைகளின் விடயப்பரப்பும் அளவும் எனக்கு கிடைத்துள்ள பதவியணி, ஏனைய வளங்கள் மற்றும் நேரம் போன்ற மட்டுப்பாடுகளை அனுசரித்து இயலுமானவரை விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளத்தக்க வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுகள் சம்பந்தமாக பிரதம கணக்கீட்டு அலுவலரின் பொறுப்பு -**

ஒதுக்கீட்டுக் கணக்கினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், பிற நியதி முறையான ஏற்பாடுகள், அரச நிதிசார் மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு அமைவாக பேணிவருதல், தயாரித்தல் மற்றும் நியாயமான வகையில் சமர்ப்பித்தல் பிரதம கணக்கீட்டு அலுவலரது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக எழக்கூடிய பொருன்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவகையில் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுகளைத் தயாரித்தல் மற்றும் நியாயமான வகையில் சமர்ப்பிக்க ஏற்புடைய அக கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் பேணிவருதலும் இத்தகைய பொறுப்பில் அடங்கும்.

**1.3 கணக்காய்வு அவதானிப்பு**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியன்று நிதிசார் அறிக்கைகள் மற்றும் ஏடுகளுக்கிணங்க தேசிய கல்வி ஆணைக்குழுவின் ஒதுக்கீட்டுக் கணக்கு இங்கு (அ) முதல் (இ) வரையான பொதுவான அவதானிப்புகள் மற்றும் கீழே 1.4 இருந்து 1.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் நீங்கலாக திருப்திகரமாக தயாரிக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

| வினா | விடை |
|---|---|
| **(அ)** ஆவணங்கள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை -------------------------------------------- ***உரிய ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக இற்றைப்படுத்தப்படாமை***<br><br>நிலையான வைப்பு ஏடு – 1978 டிசம்பர் 10ம் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 842 உடைய திறைசேரி சுற்றறிக்கை, 1988 ஒகஸ்ட் 04ம் திகதி வெளியிடப்பட்ட 354ம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2009 ஒக்டோபர் 11ம் திகதி வெளியிடப்பட்ட டீ மற்றும் ஏ 2009/2ம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை.<br><br>கணணி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருள் - 2002 நவம்பர் 28ம் திகதி வெளியிடப்பட்ட IAI/2002/02 இலக்கமுடைய திறைசேரிச் சுற்றறிக்கை | **(அ)** 12.07.2013ம் திகதி வெளியிடப்பட்ட அரச நிதிச் சுற்றறிக்கைக்கு அமைவாக ஆணைக்குழுவின் சொத்துக்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் நிலையான சொத்துக்கள் பதிவேடும் இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. (இற்றைப்படுத்தப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரதி 1ம் இணைப்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.) |
| **(ஆ) பாதீட்டு வேறுபாடு**<br>i) செலவுத் தலைப்பு 01ற்காக ஒதுக்கப்பட்ட ரூ. 50,000 முழுவதும் எஞ்சியிருந்தது.<br>ii) செலவுத்தலைப்பு 05 இன் கீழ் மேலதிக ஒதுக்கீடு காணப்படுதல் மற்றும் திட்டமிட்ட செயற்பாடுகள் செயற்படுத்தப்படாமையினால் ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் மிகுதியாக ரூ. 1,430,894 இருந்ததுடன், அந்த செலவு விடயத்திற்குரிய முழு ஒதுக்கீட்டில் நூற்றுக்கு 14இல் நூற்றுக்கு 69 இடைவெளியில் இருந்தது. | **(ஆ)** இயந்திரங்களைப் புதுப்பித்தல் மேற்கொள்ளப்படாமையினாலும், பல எதிர்பார்க்கப்பட்ட செலவுகளுக்கு அச்சந்தர்ப்பங்களில் முற்பணம் திறைசேரியில் இருந்து கிடைக்காமையினாலும் அக்காலப்பகுதியில் செலவு மேற்கொள்ளப்படவில்லை.<br><br>மீண்டு வரும் செலவுத் தலைப்பு மற்றும் மூலதனச் செலவும் தலைப்பு என்பவற்றின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்ட தொகையில் 90% வீதம் (ஒதுக்கீட்டுக் கணக்கு டி.ஜி.ஏ.5) செலவு செய்யப்பட்டுள்ளது. பிரயோக ரீதியான காரணங்களினால் இந்த செலவை விஞ்சுவதற்கான தேவையெழவில்லை. |
| **(இ) பணி முற்பணக் கணக்கு**<br><br>(I) 371ம் நிதிப் பிரமாணத்திற்கு அமைவாக ஒவ்வொரு நிறைவேற்றுத்தர உத்தியோகத்தருக்கும் ஒரு தடைவ வழங்கக்கூடிய உச்சளவு இடைக்கால பணி முற்பணம் ரூ. 50,000மா அதிகரித்திருந்த பொழுதும் அந்த வரையறையை மீறி 04 நபர்களுக்கு 16 சந்ததுப்பங்களில் ரூ. 50,000 இருந்து ரூ. 130,000 வரை இடைக்கால பணி முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.<br><br>ஆணைக்குழுவின் கூட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் என்பவற்றுக்காக மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் 21 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூ. 638,000 முற்பணத் தொகையில் ரூ. 239,000 அல்லது 37% மீதியாக உள்ளது. அதேபோல், முற்பணம் பெற்றுக்கொண்ட பணிகளுக்கல்லாது செலவழித்தல், முற்பணங்களில் அல்லது முற்பணங்கள் வழங்குதல், பணிகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணத்தை தீர்வை | **(இ)**<br>I. ஆணைக்குழுவின் பணிகளுக்காக முற்பணத் தொகையை ரூ. 50,000மாக பேணுவதற்கு திறைசேரியினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. வருட முடிவின் இறுதி மாதங்களில் முற்பணம் கிடைக்கும் விகிதத்திற்கு அமைவாக நிகழ்ச்சித்திட்டத்தை மீள்திருத்தி செயற்படுத்தும் பொழுது அத்தியாவசிய வியடங்களுக்கு பிரதான கணக்கீட்டு அலுவலரின் அனுமதியின் கீழ் இவ்வாறு பணத்தினை பயன்படுத்துவதற்கான தேவையேற்பட்டது. செயலாற்றுகை நிறைவேற்றப்பட்டதுடன், அரசுக்கு நிதியியல் ரீதியாக நட்டம் ஏற்படவில்லை.<br><br>II. முற்பணத் தொகையில் 37% வீதம் மிகுதியாவதற்கு பிரதான காரணம் கூட்டங்களில் பங்களிப்பு செய்யப்படாமையாகும். குழுவின் அங்கத்தவர்கள் பங்களிப்பு செய்யாமை ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டுக்குள் அமையாத காரணியாகும். |

| | |
|---|---|
| செய்யாமல் மேலும் முற்பணம் பெற்றுக்கொண்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | அலுவலர்களின் பற்றாக்குறை காரணமாக ஒரே அலுவலர் கருத்திட்டங்கள் பலவற்றுக்கு பணத்தைக் கொடுப்பதற்காக ஒரு வாரத்தினுள் மூன்று பிரதேசங்களுக்கு செல்ல வேண்டி ஏற்பட்டதனால் முற்பணத்தை தீர்ப்பனவு செய்யத் தாமதமானது. அரசுக்கு நிதியியில் நட்டம் ஏதும் ஏற்படவில்லை. அனைத்து முற்கொடுப்பனவுகளும் அனுமதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்டது.<br><br>மேற்குறித்த ஐ, ஐஐ நிலமை ஏற்படாமல், முற்பணத் தொகையை ரூ. 100,000 வரை அதிகரிக்குமாறு நிதி அமைச்சிடம் கோரப்பட்டிருந்த போதிலும், முற்பணக் கொடுப்பனவுத் தொகை ரூ 75,000.00 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. |
| **1.4 நல்லாளுகை மற்றும் கணக்கீடு**<br>**1.4.1 வருடாந்த செயற்பாட்டுத் திட்டம்**<br>2013ம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்டிருந்த செயற்பாட்டு திட்டம் தேசிய கல்வி ஆணைக்குழுவினால் அனுமதியளிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த திட்டத்தில் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்குரிய காலம் அல்லது காலவெல்லை, மதிப்பீடு செய்யப்பட்ட ஆகுசெலவு, ஒவ்வொரு பணிகளுக்கும் பொறுப்புக் கூறும் அலுவலர் குறிப்பிடப்படவில்லை. | எதிர்காலத்தில் வருடாந்த செயற்பாட்டு திட்டத்தை விரிவாகத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| **1.4.2 வருடாந்த பெறுகைத் திட்டம்**<br>மூலதன சொத்துக்களை கைப்பற்றுவதள்கு வருடாந்த ஒதுக்கீடாக ரூ. 850,000ற்கு பெறுகை திட்டமொன்று தயரிக்கப்பட்டு, ரூ805,256ற்கு பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 பந்திக்கு அமைவாக பெறுகைத் திட்டம் இற்றைப்படுத்தப்படவில்லை. | மதிப்பீட்டைத் தயாரிக்கும் பொழுது பழைய ஆணைக்குழு செயற்படாமல் இருந்தது. புதிய ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் கூட்டம் மற்றும் கருத்திட்டம் என்பவற்றுக்கு ஏற்படும் தேவைகளுக்கு அமைவாக கொள்வனவு செய்யப்பட்டது. |
| **1.4.3 உள்ளகக் கணக்காய்வு**<br>ஆரம்பத்தில் இருந்து இது வரை உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை.<br><br>**1.4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை செயற்படுத்துதல்.**<br><br>குணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் செயற்படவில்லை. | முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் ஊடாக அனுமதியளிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு பிரமாணத்தில் தேசிய கல்வி ஆணைக்குழுவிற்கு உள்ளக கணக்காய்வாளர் பதவி உள்ளடக்கப்படவில்லை.<br><br>ஜனாதிபதி அலுவலகத்தின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் முகாமைத்தவ கணக்காய்வுக் குழுவை நியமித்துள்ளதுடன், ஜனாதிபதி செயலாளர் காரியாலயத்தின் உள்ளக கணக்காய்வு அலுவலரினால் இந்த ஆணைக்குழுவின் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்காக ஜனாதிபதி காரியாலயத்தின் பிரதான கணக்காய்வாளருக்கு எழுத்து மூல கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| **1.5 சொத்து முகாமைத்துவம்**<br>**1.5.1 வருடாந்த கையிருப்பு ஆய்வினை மேற்கொள்ளல்.**<br>2013ம் ஆண்டுக்கான கையிருப்பு ஆய்வுக் குழுவினால் அறிக்கையில் காட்டப்பட்டிருந்தவாறு பயன்படுத்தப்பட முடியாத பொருட்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படாமை. | 17.07.2014ம் திகதி பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. |
| **1.6 இணங்காமை**<br>**சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்காமை**<br>நிதிப் பிரமாணத்தின் இலக்கம் பெறுமதி இணங்காமை<br>---------------- ------------- ---------------------<br>(அ) நிதிப்பிரமாணம் 137 19,000 கொடுப்பனவு வவுச்சர் 2க்கு அனுமதியளிக்கப்படவில்லை | அனுமதியின்றி கொடுப்பனவு செய்யப்படவில்லை. அனுமதி உரிய வவுச்சர் இரண்டுடன் இணைக்கப்பட்டுள்ள குறிப்பில் உள்ளது. குறிப்பில் உள்ள அனுமதிக்க அமைவாக ரூ.5,000 மற்றும் ரூ.14,000 மட்டுமே கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 138 மற்றும் 245 (1) 176, 536 ஒவ்வொரு வவுச்சரும் உறுதிப்படுத்தல் அலுவலரினால் சான்றுபடுத்தப்பட வேண்டிய போதிலும் 08 வவுச்சர்கள் உறுதிப்படுத்தப்படாமல் இருந்தது<br><br>(இ) நிதிப்பிரமாணம் 237 (ஆ) 65,036 கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் பொருட்கள் கிடைக்கப்பெற்றமைக்கான பதிவேட்டில் உட்படுத்தப்பட்டது என்பதை உறுதிப்படுத்தாமல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br><br>(ஈ) நிதிப்பிரமாணம் 262 (2) 322,120 05 கொடுப்பனவு வவுச்சர்களில் கொடுப்பனவு செய்யப்பட்டது என்பதற்கான முத்திரை இடப்படவில்லை.<br><br>(உ) நிதிப்பிரமாணம் 262 (3) 218,817 05 கொடுப்பனவு வவுச்சர்களில் கொடுப்பனவு செய்யப்பட்ட திகதி மற்றும் கையொப்பம் இடப்படவில்லை. | தவறுகை<br><br>எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஊ) நிதிப்பிரமாணம் 454 2013 ஜனவரியில் இருந்து ஜூலை வரை நுகர்வுப் பொருட்கள் கொள்வனவு செய்யப்படுதல் மற்றும் விநியோகித்தல் ஆவணப்படுத்தப்படவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (எ) நிதிப்பிரமாணம் 715(3) கையிருப்பு புத்தகம் மேற்பார்வை செய்யப்படவில்லை.<br><br>(ஏ) நிதிப்பிரமாணம் 753(1)(2) பொருட்கள் கொள்வனவு செய்யப்படுதல் மற்றும் விநியோகித்தல் பற்றுச்சீட்டு பயன்படுத்தப்படவில்லை.<br><br>(ஐ) நிதிப்பிரமாணம் 754 எழுது கருவிகள் மற்றும் நுகர்வுப்பொருட்கள் கையிருப்பு புத்தகம் 31.12.2013ம் திகதியில் சமப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன், கையிருப்பு ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை. | கணக்காய்வுத் திணைக்களத்தின் வழிகாட்டலின்படி கையிருப்பு புத்தகம் மேற்பார்வை செய்யப்படுகின்றது. |

| | |
|---|---|
| (ஓ)நிதிப்பிரமாணம் 772 — 31.12.2013ம் திகதியில் கையிருப்பு ஆய்வு அறிக்கையில் 42 பயன்படுத்தப்பட முடியாத பொருட்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 772 அமைவாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பயன்படுத்தப்பட முடியாத பொருட்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 772 அமைவாக நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>நிர்வாக அலுவலர் ஒய்வு பெற்றதனாலும், நிகழ்ச்சித்திட்ட அலுவலர் (நிதி) மகப்பேற்று விடுமுறையில் இருந்ததனாலும், அலுவலர்களின் பற்றாக்குறை காரணமாக உரிய முறையில் பணிகள் பகிர்ந்தளிக்கப்படவில்லை. தற்போது வெற்றிடம் நிரப்பப்பட்டுள்ளதனால், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய இவ்வாறான பிரச்சனைகளை தடுப்பதற்கு இயலுமாகும். |
| **1.7 செயலாற்றுகை**<br>**-----------------**<br>2013ம் ஆண்டுக்கான வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்திற்கு அமைவாக ஆணைக்குழுவின் முன்னேற்றம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. | |
| **(அ) முழுமையாக மேற்கொள்ளப்படாத பணி**<br>(i) உப செயற்பாடு 1 – சேவை ஆலோசகர்கள் மூலம் பாடசாலை முறைமையில் இருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் அபிவிருத்தி பொறிமுறை. (Develop mechanism for collecting information from school system through in service advisers) | இலங்கையில் உள்ள பாடசாலை முறைமையில் உள்ள 9875 செயற்படும் பாடசாலைகளில் இந்த செயற்பாடு மேற்கொள்ளப்படல் வேண்டும். தேசிய கல்வி ஆணைக்குழுவில் காணப்படும் வரையறுக்கப்பட்ட மனிதவளம் காரணமாக குறுகிய காலத்தினுள் இவ்வாறான பணிகளை நிறைவு செய்வது இயலாத காரியமாகும். 2013ம் ஆண்டு வடமேல் மாகாணத்தில் உள்ள 3ம் வகையைச் சேர்ந்த பாடசாலைகளில் மட்டும் இப்பணி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |
| (ii) உப செயற்பாடு 2- தேசிய பல்கலைக்கழகங்களை அபிவிருத்தி செய்வதற்காக முன்மொழிவுகளைத் தயாரித்தல் (Preparation of Policy proposals for development of national universities) | இந்தப் பணி நீண்ட கால ஆலோசனை நடவடிக்கைகளின் மூலமே பூர்த்திசெய்யப்படுல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட பல்கலைக்கழகங்களினுள் மேற்கொள்ளப்பட்ட களவிஜயங்களில் உயர் கல்வி பாடவிதானங்களுக்கு பொறுப்பான உப குழு அங்கத்தவர்களுடன் பங்குபற்றிய இலக்குக் குழு கலந்துரையடல்கள் மூலம் செயற்பாட்டை ஆரம்பித்தல் மட்டும் 2013ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. தற்போது அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. |
| **(ஆ) போதியளவில் மேற்கொள்ளப்படாத பணிகள்**<br>(i) உப செயற்பாடு 3- சிறிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக கொள்கை முன்மொழிவுகளைத் தயாரித்தல். (Preparation of policy proposals and strategy for development of small schools) 2012ம் ஆண்டிலிருந்து இந்தக கருத்திட்டம் 09 மாகாணங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளில் இருந்து தகவலக்ள பெற்றப்பட்டு சிறிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக கொள்கை முன்மொழிவுகளைத தயாரிப்பதற்கு திட்டமிட்டமிட்டிருந்த போதிலும் வடமேல் மாகணத்தில் தகவலகள் சேகரித்தல் தவிர்ந்த வேறு பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. | நிலவிய வரையறுக்கப்பட்ட மனிதவள மற்றும் பௌதீக வளப் பற்றக்குறை காரணமாக 2013ம் ஆண்டு வடமேல் மாகாணங்களில் உள்ள சிறிய பாடசாலைகளுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டது. 2014ம் ஆண்டு மேலும் 4 மாகாணங்கள் உள்ளடங்குமாறு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தரவுகள் சேகரிப்புடன் தரவுப் பகுப்பாய்வும் மேற்கொள்ளப்படுகினறது. |

| | |
|---|---|
| (ii) உப செயற்பாடு 3 – கல்வி முறைமை, அலுவலகம் என்பவற்றில் சிங்கள மொழியைப் பயன்பாட்டிற்று அச்சடிக்கப்பட்ட ஊடாகம் மற்றும் நியம தொடர்பாடல் முறை என்பவற்றைத் தயாரித்தல். ( Preparation of standards communication and the printed media for Sinhala language usage in education system, official) உரிய தரப்பினரிடம் தகவல்கள் சேகரிக்கப்பட்டு, அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு கொள்கை முன்மொழிவு தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், சிங்கள மொழிப் பாவனை தொடர்பாக இரண்டு கலந்துரையாடல்களைத் தவிர்த்து வேறேதும் மேற்கொள்ளப்படவில்லை. | பல்வேறு தரப்பினரின் பங்களிப்புடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்களுக்கு அமைவாக கொள்கை வரைவு தயாரிக்கப்படல் வேண்டும். அதன் படி மிகுதி நடவடிக்கைகள் தொடர்கின்றன. |
| **(இ) திட்டமிடுதல்**<br>(i) 2013 – 2016ம் ஆண்டுகளுக்கிடையிலான கூட்டிணைந்த திட்டத்திற்கு தேசிய கல்வி ஆணைக்குழுவினால் அனுமதி வழங்காதிருந்ததுடன், அந்தந்த வருடங்களுக்கான அந்தந்த பணிகளுக்கு உரிய மதிப்பீட்டு செலவும் அந்தந்த பணிகளுக்கான பௌதீக இலக்கும் உட்படுத்தப்படவில்லை.<br><br>(ii) 2003 ஜூன் 02ம் திகதி இலக்கம் பீஈடி.∴12 சுற்றறிக்கையில் 5.1.2ம் பந்தியில் வழங்கப்பட்ட ஆலோசனைக்கு அமைவாக, கூட்டிணைக்கப்பட்ட திட்டத்தில் ஆணைக்குழுவில் காணப்படும் பௌதீகள வளங்கள் மற்றும் கடந்த 2 வருடங்களுக்கான தொழிற்பாட்டு பெறுபேறு மீளாய்வு என்பன உட்படுத்தப்படவில்லை. | 2014ம் ஆண்டினுள் இந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| **1.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்**<br>(அ)தொழில்நுட்ப மதிப்பீட்டை மேற்கொள்ளாமல் ரூ.152,040 மற்றும் ரூ291,200 செலுத்தி மோட்டார் சைக்கல் மற்றும் பிரதியெடுக்கும் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டது. | **(அ) சைக்கில் கொள்வனவு**<br>பெறுகைக் குழுத் தலைவரான பிரதான கணக்கீட்டு அலுவலர் இயந்திரப் பொறியியல் விடயம் தொடர்பாக சிறந்த அறிவுடையவர். அதனூடாக தொழில்நுட்ப மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.<br><br>பிரதியெடுக்கும் இயந்திரத்தைக் கொள்வனவு செய்தல் நெடுஞ்சாலைகள் மற்றும் நீர் வள முகாமைத்தவ அமைச்சின் பட்டய பொறியியலாளரினால் விசேட அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) ரூ 335,450 செலுத்தி 08 சதுரஅடிக்கு அவசியமான அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்கையில் 2006ம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசின் பெறுகை வழிகாட்டல் நூலில் 9.8(இ) பந்தி ஆலோசகைக்கு அப்பால் பெறுநர் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தமை. | (ஆ) இறுதி நேரத்தில் கையிலிருந்த பணத்தை பிரயோசனப்படுத்துவதற்காக பிரதான கணக்கீட்டு அலுவலரின் மேற்பார்வையின் கீழ் பெறுகை குழுவின் அனுமதியின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டது. பெறுகைக் குழு நியாயமான காரணங்களின் கீழ் அனுமதியை வழங்கியது. |
| (இ) அவசரநிலைமையைக் கருதி பெறுகை குழுவின் அனுமதி மற்றும் தொழில்நுட்பக் குழுவின் அனுமதியின்றி ரூபா 386,500 செலுத்தி மடிக்கணணிகள் 03ம் அவற்றுக்கு வின்டோஸ் மென்பொருள் 05ம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | (இ)மடிக்கணணி பயன்பாட்டாளர்களினால் வழங்கப்பட்ட விசேட குறிப்புகள் பெறுகைக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் பின்னர் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டது. மடிக்கணணி கையிருப்பு பதிவேட்டில் உட்படுத்தப்பட்டுள்ளது. தலைவருக:கு வழங்கப்பட்ட கணணிக்கான கொடுப்பனவு பத்திரம் |

| | |
|---|---|
| **1.9 மனித வள முகாமைத்துவம்**<br>-----------------------------------<br>**(அ) அனுமதியளிக்கப்பட்ட பணிக்குழு எண்ணிக்கை மற்றும் உண்மையான பணிக்குழு எண்ணிக்கை**<br>31 டிசம்பர் 2013ம் திகதி அனுமதியளிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை மற்றும் உண்மையான ஊழியர் எண்ணிக்கை கீழ்வருமாறு அமையும். | கோவையில் இடப்பட்டுள்ளது. விநியோகிக்கப்பட்டது என இன்வொயிசில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதான கணக்கீட்டு அலுவலரினால் கொள்வனவு செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br><br>**(அ) மனிதவள முகாமைத்துவம்**<br>ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வெற்றிடங்களின் எண்ணிக்கை 03 ஆக குறைக்கப்பட்டுள்ளது. அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| ஊழியர் வகை | | அனுமதியளிக்கப்பட்ட எண்ணிக்கை | உண்மை எண்ணிக்கை | வெற்றிடம் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஸ்ட மட்டம் | 03 | 03 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 11 | 04 | 07 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 10 | 09 | 01 |
| (iv) | முதலாம் மட்டம் | 12 | 12 | - |
| | | 36 | 28 | 08 |

மீளாய்வு வருடத்தின் இறுதியில் 08 பதவிகளுக்கான வெற்றிடம் நிலவியது.